LIBRARY
15 MAY 1958
STATE LEGISLATURE

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 4th May 1957.

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Allocation of steel for the Madras State

* 5 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the quantity of steel allotted for the State for the first quarter of 1957–58 ;

(*b*) the quantity earmarked for agriculture and small-scale industries in the State ; and

(*c*) whether any representation to the Central Government has been made for increasing the allotment?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The quantity of steel allotted to this State for the first quarter of 1957–58 is about 2,750 tons as detailed below :—

	TONS.
Government Development Schemes quota ..	600
Steel Processing Industries quota	812
Non-agricultural quota	1,320
	2,732 or
roughly	2,750

(*b*) The particulars of allocation are awaited from the Government of India.

(*c*) No, Sir. Mr. Speaker, I desire to add, Sir, that the actual supply position will be watched for some time before making any representations for allotments during the current year.

SRI M. KALYANASUNDARAM : விவசாயத்திற்காகவும் சிறு கைத் தொழில்களுக்காகவும் இப்பொழுது ஒதுக்கப்பட்டிருப்பதற்கு மேல் அதிகமாக ஒதுக்கப்படுமா, அல்லது இப்பொழுது கொடுக்கப்படும் அளவுக்குள்ளேயே தான் ஒதுக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது ஒதுக்கப்பட்டு இருக்கின்ற அளவுக்குள்ளேயேதான் விவசாயத்துக்கும், சிறு கைத் தொழில்களுக்கும் ஒதுக்கப்படும்.

SRI K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that for meeting steel requirements for constructing buildings

in Madras City, there is considerable difficulty? Will the Government think of allotting is higher quota for constructing buildings in the City of Madras?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, it is true that the quota is short of our requirements. But the Government of India have expressed their inability to increase the quota on account of foreign exchange difficulties. As I said in the earlier portion of my answer, we shall study the actual supply position and make suitable representations to the Government of India.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. Minister tell us the basis on which the Central Government allot quota to this State? May I know the basis on which these allotments are made?

THE HON. SRI R. VENKATARAMAN : The basis is generally the Five-Year Plan.

SRI N. K. PALANISAMI : இந்த "ஸ்டீல்" இப்போழுது எப்படி விநியோகிக்கப்படுகிறது ? விவசாயிகளுக்கு முன்பு கூட்டுறவு சொஸைட்டிகளின் மூலம் விநியோகிக்கப்பட்டு வந்தது ஏன் நிறுத்தப்பட்டிருக்கிறது ? விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் எஃகு கிடைப்பதற்கு மறுபடியும் கூட்டுறவு சொஸைட்டிகளின் மூலம் விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தக் கேள்வி விநியோகத்தைப் பற்றியது அல்ல. விநியோக முறையில் ஏதாவது குறைபாடுகள் இருக்குமேயானால், அவைகளை கவனித்து நிவர்த்திக்கலாம்.

SRI M. KALYANASUNDARAM : ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வரும் அளவுக்குள்ளேயேதான் விவசாயத்திற்கும் சிறு கைத்தொழில்களுக்கும் ஒதுக்கப்படுமேயானால், நகரத்தில் வீடுகள் கட்டும் தேவைக்கும் இன்னும் மற்ற தேவைகளுக்கும் போதாது. இப்போழுது கள்ள மார்க்கெட்டில் தான் இரும்பு சாமான்கள் வாங்கவேண்டி இருக்கிறது. சர்க்கார் கட்டுப்பாட்டு விலைக்கு மேலே இரண்டு மடங்கு விலைகள் கொடுத்துத்தான் சாதாரண விவசாயிகளுக்குத் தேவைப்படும் வண்டி, மற்ற கருவிகளுக்கு வேண்டிய இரும்பை வாங்கவேண்டியிருக்கிறது. இந்த நிலைமையைப் போக்குவதற்கு "கோட்டாவை" அதிகப்படுத்தவேண்டுமென்று ஏன் மத்திய சர்க்காருக்கு ராஜ்ய சர்க்கார் எழுதவில்லை ?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் க்ளாஸ் (c)-க்கு என்னுடைய பதிலில் முதலிலேயே இதைப்பற்றி சொன்னேன். '**No, Sir. Mr. Speaker, I desire to add that the actual supply position will be watched for some time before making any representations for allotments during the current year'.**

அதற்குக் காரணம் என்னவென்றால், நம்முடைய தேவை எவ்வளவு என்பதைக் கவனித்து புள்ளி விவரங்களுடன் நல்ல முறையிலே மத்திய சர்க்காருக்கு எழுதுவதற்காகத்தான். அதனால்தான் உடனே எழுத முடியவில்லை.

SRI M. D. RAMASAMI : கடந்த நான்கு வருஷங்களிலே எவ்வளவு அளவு இந்த மாகாணத்திலே இரும்பு உருக்கு உபயோகப் படுத்தப் பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரங்கள் தெரியவருமா ?

MR. SPEAKER : The hon. Member may put a separate question. His supplementary does not arise out of the main question.

4th May 1957]

SRI A. GOVINDASAMY NAYAGAR : நமது ராஜ்யத்தில் எஃகு உற்பத்தி செய்வதற்கு ஏதாவது யோசனை இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : This is also a separate question.

SRI M. JAGANNATHAN : மற்ற மாகாணங்களுக்கு மத்திய அரசாங்கம் ஒதுக்கியிருக்கும் " ஸ்டீல் கோட்டா " வைவிட சென்னை மாநிலத்திற்கு மிகவும் குறைவாக ஒதுக்கியிருக்கிறது என்பது உண்மைதானா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மற்ற மாநிலங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற " ஸ்டீல் " அளவை விட சென்னை சர்க்கார் ஒரு நாளும் குறைவாக ஏற்றுக்கொள்ளாது. அதற்கான எல்லாவிதமான முயற்சியும் செய்யும் என்று நான் உறுதியளிக்கின்றேன்.

SRI M. KALYANASUNDARAM : மந்திரி அவர்கள் பதில் சொல்லக்கூடிய சமயத்தில் " பொறுத்திருந்து பார்க்கவேண்டும் " என்று சொன்னார்கள். கடந்த ஐந்து வருஷ காலமாகவே நிலைமை இப்படித்தான் இருக்கிறது. இன்னும் எதற்காகப் பொறுத்திருந்து பார்க்கவேண்டுமென்று தெரியவில்லை. கடந்த மூன்று வருஷ காலமாக உருக்குச் சாமான்கள் கள்ள மார்க்கெட்டில்தான் விற்கப்பட்டு வருகின்றன என்பது ஒருவேளை தற்போதைய தொழில் மந்திரி அவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம் ; ஆனால், இதுசம்பந்தப்பட்ட பழைய மந்திரி அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இதற்கு முன்னதாக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ? இப்பொழுது கொடுத்திருக்கும் " கோட்டா " அளவு உயர்த்தப்பட்டிருக்கிறதா, அல்லது முன்பு கொடுத்து வந்த அளவுதான் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தியாவிலேயே மொத்த எஃகுப் பொருள்கள் குறைவாக இருக்கின்றன. காரணம், நாம் வெளி நாட்டிலிருந்து எஃகுப் பொருள்களை இங்கு கொண்டுவர முடியாததுதான். வெளி நாட்டு நாணயம் நமக்கு அதிகமாகக் கிடைக்காததால், வெளி நாட்டிலிருந்து அதிகமாக எஃகுப் பொருள்கள் இங்கு கொண்டுவர முடியவில்லை. ஆனால், எல்லா ராஜ்யங்களுக்கும் இப்பொழுது கொடுத்திருக்கின்ற " கோட்டா " குறைவுபடுத்தப்பட்டிருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கள்ள மார்க்கெட்டில் தான் என்று சொல்வதற்கில்லை. திறந்த மார்க்கெட்டிலும் சில தனிப்பட்ட வியாபாரிகள் இறக்குமதி லைசென்சு வாங்கி விற்கிறார்கள். ஆனால், அம்மாதிரி இரும்பு சாமான்களை இறக்குமதி செய்வதிலே சிரமம் இருக்கிறது. இறக்குமதி லைசென்சு நிறைய கேட்கும்போது, ஏன் " கோட்டா " வை இந்திய சர்க்கார் அதிகரித்துக் கொடுக்கக்கூடாது என்பதற்கு அமைச்சரவர்கள் விவரம் கூறுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த மாகாணத்திற்கு மொத்தம் எவ்வளவு என்று குறிப்பிட்டிருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் லைசென்சு உள் நாட்டில் இறக்குமதி செய்வதற்கு நமது சர்க்கார் "கோட்டா" கொடுக்கிறார்கள். அதிகமாக வெளிநாட்டிலிருந்து இங்கு இறக்குமதி செய்வதற்காக லைசென்சு கொடுக்க முடியாததற்குக் காரணம், வேண்டிய அளவு வெளிநாட்டிலிருந்து நமக்குக் கிடைக்காத காரணத்தால்தான். நாட்டில் பற்றாக்குறை இருப்பதால், ஒரு சில இடங்களில் விலைவாசி அதிகமாகத்தான் இருக்கும். ஓரளவு கள்ள மார்க்கெட்டும் இருக்கத்தான் செய்யும். ஆகவே, பற்றாக்குறையை அகற்ற முயற்சி செய்யவேண்டும்.

SRI K. ANBAZHAGAN : அவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத் துறையினர் கட்டுகின்ற கட்டடங்களுக்கு இரும்பும் எஃகும் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிற காரணத்தால் தான் பொது மக்களுக்குப் போதுமான அளவு இரும்பு கிடைக்கவில்லை, என்று பேசப்படுவது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

[4th May 1957

THE HON. SRI R. VENKATARAMAN : இது இந்தக் கேள்வியிலிருந்து எழவில்லை.

SRI M. P. SUBRAMANIAM : "சென்னை அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கத்தாரால் ஒதுக்கப்படும் இரும்பு ஐந்தாண்டுத் திட்ட அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது " என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஐந்தாண்டுத் திட்டத்தை வகுப்பதற்கு ஒரு ஆதாரம் இருக்கவேண்டும். நம்முடைய மாநிலத்தின் தேவைக்கு எவ்வளவு ஒதுக்கப்படவேண்டும் என்று சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டார்கள். மத்திய அரசாங்கத்தாரால் எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : "எவ்வளவு கேட்டார்கள்" என்பதற்கு என்னிடம் புள்ளி விவரங்கள் இல்லை. நமக்குத் தேவையான அளவுக்கு அவ்வப்போது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப காலத்திலேயே எழுதியனுப்பியிருக்கிறோம். ஆனால், நாட்டில் பற்றாக்குறை இருப்பதால், இந்த அளவுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாட்டில் பற்றாக்குறை இருக்கும் நிலையில் நமக்கு எவ்வளவு கிடைத்திருக்கிறதோ, அது மற்ற மாகாணங்களைவிட குறைவாக இல்லை என்பதைத்தான் பார்க்கவேண்டுமேயொழிய, நாம் கேட்ட அளவு ஏன் மத்திய அரசாங்கம் கொடுக்கவில்லை என்று பார்ப்பது சரியாகாது என்று நான் நினைக்கிறேன்.

SRI R. KRISHNASAMI NAIDU : நம் நாட்டிலே இரும்புப் பற்றாக்குறை இருப்பதன் காரணமாக, நம் தமிழ் இராஜ்யத்திலே சேலம், நீலகிரி, சத்தியமங்கலம், இன்னும் சில பகுதிகளிலே இரும்பு உற்பத்திசெய்வதற்கான கனிகள் கிடைத்திருப்பதாகவும், அதில் அதிகமாக உற்பத்தி செய்யக்கூடுமெனவும் கண்டுபிடித்து, ஐந்தாண்டுத் திட்டத்தில் " பிக் ஐரன் " என்னும் ஒரு வகை இரும்பை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு லைசென்சு வழங்கப்படுவதாகவும், அங்கு தொழிலை ஆரம்பிப்பதற்காக இப்போதே லைசென்சு கொடுக்கப்பட்டு வருவதாகவும், ஒரு சிலர் ஆரம்பித்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது. அதைப்பற்றி ராஜ்ய சர்க்காருக்கு ஏதாவது விவரங்கள் வந்திருந்தால் கனம் அமைச்சரவர்கள் தகவல் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்களுடைய பிரசங்கத்தில் கண்ட எல்லா விஷயங்களும் கவனிக்கப்படும்.

SRI K. RAMACHANDRAN : இந்த ராஜ்யத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட இரும்பை கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாகவே விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அதற்கு முன்பே நான் பதில் சொல்லி விட்டேன், விநியோக விஷயமாக வேறு ஒரு கேள்வி போடும்படி. வேறு கேள்வி போட்டால் முழு விவரங்கள் கொடுக்கலாம்.

SRI M. KALYANASUNDARAM : மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது, "நம்முடைய ராஜ்யத்திற்கு குறைத்துக் கொடுத்திருப்பதைப்பற்றி நாம் கவலைப்படக்கூடாது, வேறு ராஜ்யங்களுக்குக் கொடுத்திருக்கும் அளவுக்குக் கொடுத்திருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும் " என்று சொன்னார்கள். மற்ற ராஜ்யங்களுக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது, சரியாக ஒதுக்கப்பட்டதா என்பதற்கு புள்ளி விவரங்கள் எங்களிடம் கிடையாது. அதைத் தெரிந்துகொள்வதற்கும் எங்களுக்குச் சந்தர்ப்பம் கிடையாது. மந்திரிகளுக்கு அத்தகைய சந்தர்ப்பம் உண்டு. அவர்களுக்கு இவ்விஷயம் தெரிந்திருக்குமாதலால். நம் ராஜ்யத்திற்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய அளவு கிடைத்திருக்கிறதென்று மந்திரி அவர்கள் கருதுகிறார்களா ? அல்லது, நியாயமாகக் கிடைக்கவேண்டிய அளவிலிருந்து குறைக்கப்பட்டிருக்கிறதென்று கருதுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

4th May 1957]

The Hon. Sri R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, does the Chair want me to answer this question which is purely a hypothetical question and one of opinion?

Mr. SPEAKER : It is left to the Hon. Minister to answer it or not.

The Hon. Sri R. VENKATARAMAN : I have no answer.

Sri P. S. CHINNADURAI : *தற்போதைய உருக்கு சப்ளை நிலைமையை உத்தேசித்து, பெரிய கட்டடங்களுக்கு உருக்கு சப்ளை அதிகமாகச் செய்வதை நிறுத்தி, விவசாயத்திற்கு அதிகப்படியான அளவு சப்ளை செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?*

The Hon. Sri R. VENKATARAMAN : *விநியோகம் சம்பந்தமாக தனிக் கேள்வி போட்டால், எந்தெந்தத் துறைக்கு எவ்வளவு எவ்வளவு விநியோகம் செய்யப்படுகிறது என்று முழு விவரம் கொடுக்கப்படும். ஆகையால், அது சம்பந்தமாக தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.*

Sri N. R. THIAGARAJAN : *விநியோகம் சம்பந்தமாகத் தனிக் கேள்வி போடும்படி அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். குறிப்பாக, பாண்டிய நாட்டுக்கே இரும்பு வருவது இல்லை என்று பலமான புகார் அடிபடுகிறது. தெற்குத் தமிழகம் தேயவும், வடக்குத் தமிழகம் வாழவும் காரியங்கள் நடைபெறுகின்றன என்று பொதுமக்கள் புகார் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட புகார் இல்லையென்று அமைச்சரவர்கள் கூறமுடியுமா ?*

Sri T. T. DANIEL : On a point of order, Sir. I want to know whether hon. Members, in the guise of putting supplementary questions, can indulge in long speeches and arguments ?

Mr. SPEAKER : Surely hon. Members are not expected to do like that but how does the Chair know what they are going to speak unless their speeches are finished (Laughter).

Sri A. VEDARATHNAM PILLAI : *நாகை ஸ்டீல் ரோலிங் மில்லில் உற்பத்தி செய்கின்ற " ஸ்டீல் " இந்த " கோட்டா " வில் அடங்கியுள்ளதா ? அது எந்த இடத்தில் விநியோகிக்கப்படுகிறது ?*

The Hon. Sri R. VENKATARAMAN : *நாகை ஸ்டீல் ரோலிங் மில்லில் " ஸ்டீல் " உற்பத்தி செய்யப்படவில்லை. கிடைத்ததைக் கொண்டு* **M.S. rods** *போன்றவை செய்கிறார்கள்.*

Sri N. K. PALANISAMI : *சபையில் நடைபெறும் விவாதத்திலிருந்து, "போதுமான ஸ்டீல் கிடைக்கவில்லை" என்று தெரிய வருகிறது. ஆகவே, பற்றாக்குறையைப் போக்குவதற்கு சேலத்தில் ஸ்டீல் மில் ஒன்றை கட்டுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?*

Mr. SPEAKER : How does this question arise out of the main question? I think it is quite irrelevant.

Sri A. GOVINDASAMI NAYAGAR : On a point of order Sir, *சர்க்கார் தரப்பின் அங்கத்தினர்கள் இதே கேள்வியைக் கேட்டபோது, "இதனைக்கவனிக்கலாம்" என்று அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால், அதே கேள்வியை எதிர்தரப்பிலுள்ள அங்கத்தினர் கேட்டால், " அது முரணானது " என்று சொல்வது நியாயமா என்று கேட்கிறேன்.*

[4th May 1957

MR. SPEAKER : The Hon. Minister is not bound to answer it.

The question hour is now over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER.

(1) MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce to the House that I have received the following message from the Governor, dated the 26th April 1957 :—

"In pursuance of Article 207, Clause (1) read with Article 199, Clause (1), sub-clause (*a*) of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras General Sales Tax, Sales of Motor Spirit Taxation and Entertainments Tax (Amendment) Bill, 1957."

(2) TIME LIMIT FOR NOTICE OF AMENDMENTS TO THE MADRAS GENERAL SALES TAX, SALES OF MOTOR SPIRIT TAXATION AND ENTERTAINMENTS TAX (AMENDMENT) BILL, 1957.

MR. SPEAKER : I have also to announce to the House that amendments to the Madras General Sales Tax, Sales of Motor Spirit Taxation and Entertainments Tax (Amendment) Bill, 1957, should be delivered to the Secretary, Legislature Department, before 3 p.m. on Monday, the 6th May 1957.

III.—CALLING ATTENTION TO MATTERS OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* SUDDEN RISE IN PRICES OF PADDY IN TANJORE DISTRICT.

11-20 a.m. MR. SPEAKER : The hon. Member Sri M. D. Thiagaraja Pillai has given notice of his intention for calling the attention of the Hon. the Home Minister to a matter of urgent public importance, namely, the sudden rise in prices of paddy in Tanjore district. I understand that on account of a small accident the Hon. the Home Minister will not be making the statement. The Hon. the Revenue Minister will make the statement with reference to the matter raised.

Sri Thiagaraja Pillai : (The Member was not present).

As the hon. Member is not present we will pass on to the next item of business.

SRI A. VEDARATHNAM PILLAI : கனம் அங்கத்தினர் தன் மகன் கார் விபத்திற்குள்ளான செய்தி கேட்டு அவசரமாக வெளியில் போயிருக்கிறார். ஆகவே அவர் சார்பாக நான் இதைக்கேட்கிறேன்.

MR. SPEAKER : We shall take it up on another day. நீங்கள் அவர் சார்பாகக் கேட்கவேண்டும் என்பது இல்லை. நீங்களே தனியாக ஒரு மோஷன் கொடுக்கலாம். இல்லாவிட்டாலும் இந்த மோஷன் திங்கள்கிழமை எடுத்துக்கொள்ளப்படும்.